# லலிதா நவரத்ன மாலை

ஆக்கும் தொழில் ஐந்த்தரனாற்ற நலம்
பூக்கும் நகையாள் புவனேச்வரிபால்
சேர்க்கும் நவரத்தின மாலையினைக்
காக்கும் கண நாயக வாரணமே

மாதா ஜய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜய ஓம் லலிதாம்பிகையே

## வைரம்

கற்றும் தெளியார் காடே கதியாய்
கண்மூடி நெடுங்கனவான தவம்
பெற்றும் தெளியார் நிலையென்னில் அவம்
பெருகும் பிழையேன் பேசத்தகுமோ
பற்றும் வயிரப் படைவாள் **வயிரப்**
பகைவர்க்கெமனாக எடுத்தவளே
வற்றாத அருட்சுனையே வருவாய்
மாதா ஜய ஓம் லலிதாம்பிகையே

## நீலம்

மூலக்கனலே சரணம்  சரணம்
முடியா முதலே சரணம் சரணம்

கோலக்கிளியே சரணம்  சரணம்
குன்றாத ஒளிக்குவையே சரணம்
நீலத்திருமேனியிலே நினைவாய்
நினைவற்றெளியேன் நின்றேன் அருள்வாய்
வாலைக்குமரி வருவாய் வருவாய்
மாதா ஜய ஓம் லலிதாம்பிகையே

முத்து

முத்தே வரும் முத்தொழில் ஆற்றிடவே
முன்நின்றருளும் முதல்வீ சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம்
வேதாந்த நிவாஸினியே சரணம்
தத்தேறிய நான் தனயன் தாய் நீ
சாகாத வரம் தரவே வருவாய்
மத்தேரு ததிக்கிணை வாழ்வடையேன்
மாதா ஜய ஓம் லலிதாம்பிகையே

பவளம்

அந்தி மயங்கிய வான விதானம்
அன்னை நடம் செயும் ஆனந்த மேடை
சிந்தை நிரம் பவளம் பொழிவாரோ
தேன் பொழிலாமிது செய்தவளாரோ
எந்த இடத்தும் மனத்துமிருப்பாள்

எண்ணுபவர்கருள் எண்ணமிகுந்தாள்
மந்திர வேத மயப்பொருளானாள்
மாதா ஜய ஓம் லலிதாம்பிகையே

மாணிக்கம்

காணக்கிடையாக்கதியானவளே
கருதக்கிடையாக்கலயானவளே
பூணக்கிடையாபொலிவானவளே
புனையக்கிடையாப் புதுமைத்தவளே
நாணித்திரு நாமமும் நின் துதியும்
நவிலாதவரை நாடாதவளே
**மாணிக்**கஒளிக்கதிரே வருவாய்
மாதா ஜய ஓம் லலிதாம்பிகையே

மரகதம்

**மரகத** வடிவே சரணம் சரணம்
மதுரித பதமே சரணம் சரணம்
ஸுரபதி பணியத்திகழ்வாய் சரணம்
ஸ்ருதி ஜதி லயமே இசையே சரணம்
அர ஹர சிவ என்றடியவர் குழும
அவரருள் பெற அருளமுதே சரணம்
வரநவ நிதியே சரணம் சரணம்
மாதா ஜய ஓம் லலிதாம்பிகையே

கோமேதகம்

பூ மேவிய நான் புரியும் செயல்கள்
பொன்றாது பயன் குன்றா வரமும்
தீ மேல் இடினும் ஜெய சக்தியெனத்
திடமாய் அடியேன் மொழியும் திறமும்
**கோமேதகமே** குளிர்வான் நிலவே
குழல்வாய் மொழியே தருவாய் தருவாய்
மாமேருவிலே வளர் கோகிலமே.
மாதா ஜய ஓம் லலிதாம்பிகையே

பதுமராகம்

ரஞ்சனி நந்தினி அங்கணி **பதும**
**ராக** விகாச வ்யாபினி அம்பா
சஞ்சல ரோக நிவாரணி வாணி
ஸாம்பவி சந்த்ர கலாதரி ராணி
அஞ்சன மேனி அல்ம்க்ருத பூரணி
அம்ருத ஸ்வரூபிணி நித்ய கல்யாணி
மஞ்சுள மேரு ஸ்ருங்க நிவாஸினி
மாதா ஜய ஓம் லலிதாம்பிகையே

வைடூரியம்

வலயொத்த வினை கலையொத்த மனம்
மருளப் பறையாறொலியோத்விதால்
நிலையற்றேளியேன் முடியத்தகுமோ
நிகளம் துகளாக வரம் தருவாய்
அலையற்றசைவற்றனுபூதி பெரும்
அடியார் முடிவாழ் **வைடூரியமே**
மலையத்துவசன் மகளே வருவாய்
மாதா ஜய ஓம் லலிதாம்பிகையே

பயன்

எவர் எத்தினமும் இசைவாய் லலிதா
நவரத்தினமாலை நவின்றிடுவார்
அவர் அற்புத சக்தியெல்லாம் அடைவார்
சிவரத்தினமாய் திகழ்வா ரவரே